செய்தி வெளியீடு எண்: 017 நாள்: 04.01.2018

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (4.1.2018) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட 55 வருவாய் கிராமங்களுடன் காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள 67 வருவாய் கிராமங்களையும் உள்ளடக்கி, மொத்தம் 122 வருவாய் கிராமங்களுடன் 426 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 3 வருவாய் கோட்டங்கள், 16 வட்டங்களை உள்ளடக்கிய பெருநகர சென்னை மாநகராட்சி எல்லைக்கு இணையாக விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாவட்டத்தை துவக்கி வைத்தார்கள்.

இதன்படி, விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாவட்டம், தண்டையார்பேட்டையை தலைமையிடமாகக் கொண்டு, வடசென்னை கோட்டம் – திருவொற்றியூர், தண்டையார்பேட்டை, மாதவரம், பெரம்பூர், புரசைவாக்கம் ஆகிய 5 வட்டங்களுடன் 32 வருவாய் கிராமங்களைக் கொண்டதாகவும், அம்பத்தூரை தலைமையிடமாகக் கொண்டு மத்திய சென்னை கோட்டம் – அம்பத்தூர், அயனாவரம், அமைந்தகரை, மதுரவாயல், மாம்பலம், எழும்பூர் ஆகிய 6 வட்டங்களுடன் 47 வருவாய் கிராமங்களைக் கொண்டதாகவும், கிண்டியை தலைமையிடமாகக் கொண்டு தென் சென்னை கோட்டம் – கிண்டி, மைலாப்பூர், வேளச்சேரி, ஆலந்துார், சோழிங்கநல்லூர் ஆகிய 5 வட்டங்களுடன் 43 வருவாய் கிராமங்களைக் கொண்டதாகவும் அமையும். இதன்மூலம், விரிவாக்கம் செய்யப்பட்ட சென்னை மாவட்டம் பெருநகர மாநகராட்சி எல்லைக்கு இணையாக அமையும்.

விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் வாழும் பொதுமக்கள் மருத்துவ வசதிகள், மாவட்ட வேலைவாய்ப்பகங்களில் பதிவு, கல்வி தொடர்பான பணிகள், பேரிடர் மேலாண்மை தொடர்பான அரசின் நலத்திட்ட உதவிகள், தேர்தல் தொடர்பான பணிகள், சட்டம் மற்றும் ஒழுங்கு சார்ந்த பணிகள், சமூக பாதுகாப்பு திட்டங்கள், நிலம் தொடர்பான பணிகள் மற்றும் நலத்திட்டங்களை எளிதில் விரைவாகப் பெற முடியும்.

மேலும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் முதற்கட்டமாக தமிழகத்திலுள்ள 21 மாவட்டங்களைச் சார்ந்த 43 வட்டங்களுக்குரிய 24.11 இலட்சம் கணினிப்படுத்தப்பட்ட நிலஅளவை புலவரைபடங்களை http://eservices.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக பொதுமக்கள் பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான

இணையவழி சேவையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று துவக்கி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் இதுவரை **286** வட்டங்களின் நிலஆவணங்கள் இணையவழிப் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இதன்பலனாக, பொதுமக்கள் வீட்டில் இருந்தவாறோ அல்லது பொதுசேவை மையங்கள் மூலமாகவோ தங்களது பட்டா / சிட்டா மற்றும் 'அ' பதிவேடு நகல்களை பதிவிறக்கம் செய்து கொள்ள இயலும். மேலும், பொதுமக்கள் வட்ட அலுவலகங்களை தேடிச் செல்ல வேண்டிய அவசியமின்றி, இணையம் மூலமாகவே பட்டா மாறுதலுக்கு விண்ணப்பிக்க இயலும். இதனால் தேவையற்ற செலவும், காலவிரயமும் தவிர்க்கப்படுகிறது. இப்பணியின் அடுத்த கட்டம், புலவரைபடங்களை கணினிமயமாக்குதல் ஆகும். பொதுமக்களுக்கு, எழுத்துருவிலான நிலஆவணங்கள் மட்டுமின்றி, புலவரைபடங்களும் பல்வேறு காரணங்களுக்காக தேவைப்படுகிறது. இந்த தேவையை நிறைவு செய்வதற்காக புலவரைபடங்கள் கணினிப்படுத்தப்பட்டுள்ளன.

புலவரைபடங்களை கணினிப்படுத்தும் பணி 'கொலாப்லேண்ட்' எனும் மென்பொருள் மூலம் **2004–**ஆம் ஆண்டு சோதனை அடிப்படையில் பெரம்பலூர் மாவட்டத்தில் துவக்கப்பட்டு, படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதன் தொடர்ச்சியாக, மொத்தமுள்ள **55.33** இலட்சம் புலவரைபடங்களில் **54.12** இலட்சம் புலவரைபடங்கள் இதுவரை கணினிப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி தற்போது, கோயம்புத்தூர் மாவட்டம் – கோயம்புத்தூர் வடக்கு, மதுக்கரை, மேட்டுப்பாளையம், தருமபுரி மாவட்டம் – பாப்பிரெட்டிபட்டி, தருமபுரி, நல்லம்பள்ளி, அரூர், திண்டுக்கல் மாவட்டம் – நத்தம், ஈரோடு மாவட்டம் – அந்தியூர், பவானி, தாளவாடி, காஞ்சிபுரம் மாவட்டம் – உத்திரமேரூர், கன்னியாகுமரி மாவட்டம் – தோவாளை, கரூர் மாவட்டம் – கடவூர், மதுரை மாவட்டம் – மதுரை மேற்கு, நாமக்கல் மாவட்டம் – ராசிபுரம், பரமத்திவேலூர், குமாரபாளையம், நாகப்பட்டினம் மாவட்டம் – திருக்குவளை, பெரம்பலூர் மாவட்டம் – பெரம்பலூர், ஆலத்தூர், வேப்பந்தட்டை, புதுக்கோட்டை மாவட்டம் – கந்தர்வகோட்டை, புதுக்கோட்டை, சேலம் மாவட்டம் – சங்ககிரி, மேட்டூர், எடப்பாடி, நீலகிரி மாவட்டம் – குன்னூர், கோத்தகிரி, தேனி மாவட்டம் – தேனி, திருச்சிராப்பள்ளி மாவட்டம் – ஸ்ரீரங்கம், திருநெல்வேலி மாவட்டம் – சிவகிரி, செங்கோட்டை, திருப்பூர் மாவட்டம் – பல்லடம், திருப்பூர் தெற்கு, அவிநாசி, திருவள்ளூர் மாவட்டம் – பூவிருந்தவல்லி, ஊத்துக்கோட்டை, திருத்தணி, திருவொற்றியூர், மதுரவாயல், திருவண்ணாமலை மாவட்டம் – ஆரணி, விழுப்புரம் மாவட்டம் – வானூர் ஆகிய **43** வட்டங்களுக்குரிய **24.11** இலட்சம்

கணினிப்படுத்தப்பட்ட புலவரைபடங்களை இணையதளம் வாயிலாக பொதுமக்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இதுமட்டுமின்றி, எஞ்சிய 247 வட்டங்களின் புலவரைபடங்களும் ஜுன் 2018–க்குள் பல கட்டங்களாக இணையவழி பராமரிப்பிற்கு கொண்டுவரப்படவுள்ளன. இப்பணி நிறைவு பெற்றவுடன் அனைத்து பட்டாதாரர்களும் பயனடைவர். இதன்மூலம், பொதுமக்கள் தங்களது பட்டா மற்றும் 'அ' பதிவேடு நகல்களுடன் புலவரைபடங்களையும் http://eservices.tn.gov.in என்ற இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். நத்தம் மற்றும் நகர நிலஆவணங்களும் தற்போது கணினிப்படுத்தப்பட்டுள்ளன. அவையும் விரைவில் இணையவழி பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படவுள்ளன. இதன்மூலம், அனைத்துவகை நிலஆவணங்களும் இணையவழி பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஓ.எஸ். மணியன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.க. சண்முகம், இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை செயலாளர் டாக்டர் சந்தர மோகன், பி., இ.ஆ.ப., நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட துறை இயக்குநர் (பொறுப்பு) திரு.வி. அருண் ராய், இ.ஆ.ப., நிலஅளவை இணை ஆணையர் திரு.மதுசூதன ரெட்டி, இ.ஆ.ப., தேசிய தகவல் தொடர்பு மைய மாநில தகவலியல் அலுவலர் டாக்டர் பி. பாலசுப்பிரமணியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 4.1.2018**